தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>மேட்டூரிலிருந்து இன்று முதல் மீண்டும் தண்ணீர் திறப்பு</u>**



மேட்டூர் அணையிலிருந்து செவ்வாய்க்கிழமை (டிச.30) முதல் மீண்டும் தண்ணீர் திறந்து விட முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உத்தரவிட்டார். இதுகுறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: மேட்டூர் அணையிலிருந்து, மேட்டூர் கிழக்கு, மேற்குக் கரை கால்வாய்களின் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களிலுள்ள 45 ஆயிரம் ஏக்கர் நிலங்களின் பாசனத்துக்காக 137 நாள்கள் தண்ணீர் திறந்து விடப்பட்டன. இதன் மூலம் அந்தப் பகுதிகளில் பாசனங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இப்போது, அந்தப் பகுதி களில் நடவு செய்யப்பட்டுள்ள நெல், விளைச்சலுக்குத் தயாராக உள்ளதால் செவ்வாய்க்கிழமை (டிச.30) முதல் ஜனவரி 15-ஆம் தேதி வரை மேலும் 17 நாள்களுக்கு பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இதையேற்று, மேட்டூர் அணையிலிருந்து மேட்டூர் கிழக்கு, மேற்குக் கரை கால்வாய்களில் பாசனத்துக்காக செவ்வாய்க் கிழமை முதல் மேலும் 17 நாள்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விட உத்தரவிடப் படுகிறது. இதனால், சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் உள்ள 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக கடந்த 2 நாள்களாக மழை பெய்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயிலும் இல்லாமல், மழையும் இல்லாமல் இதமான வானிலை

நிலவியது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை முதலே மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.ஞாயிற்றுக்கிழமை இரவு முழுவதும் விடாமல் தூறல் விழுந்து கொண்டே இருந்தது. இது திங்கள்கிழமையும் தொடர்ந்தது. நாள் முழுவதும் அவ்வப்போது விட்டு, விட்டு தூறல் விழுந்து கொண்டே இருந்தது. இந்த நிலையில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி கேளம்பாக்கத்தில் 20 மி.மீ. மழை பதிவானது. அடுத்தபடியாக மாமல்லபுரத்தில் 15 மி.மீ. மழை பதிவானது. மற்ற பகுதிகளில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): தாம்பரம், திருக்கழுகுன்றம் 8, உத்தரமேரூர் 6, செங்கல்பட்டு 4.80, செய்யூர் 3, ஸ்ரீபெரும்புதூர் 2.30, காஞ்சிபுரம் 2.10, மதுராந்தகம் 1.

**<u>திருவள்ளூரில்பலத்தமழை</u>**

திருவள்ளூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை வரை பரவலாகப் பலத்த மழை பெய்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் மழை பெய்தது. ஞாயிற்றுக் கிழமை இரவு முதல் திங்கள்கிழமையிலும் நீடித்த மழை காரணமாக பொது மக்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டது. திருவள்ளூரைச் சுற்றியுள்ள ராஜாஜிபுரம், பூங்கா நகர், ஆஞ்சனேயபுரம், எம்ஜிஆர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் மண் சாலைகள் சேறும் சகதியுமாக மாறியது. மேலும், சாலைகளும் சேதமடைந்தன. ஏற்கெனவே அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் பலர் தங்களது பயணத் திட்டத்தை மாற்றிக் கொண்ட நிலையில், தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கைபாதிப்படைந்தது.

தினமலர்

## இன்றையவேளாண்செய்திகள்

### மாவட்டத்தில்பரவலாகமழை

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், நேற்று காலை முதல் பரவலாக மழை பெய்தது. இலங்கையை அடுத்த தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நீடித்து வரும் தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர், செங்கல்பட்டு, மதுராந்தகம், மாமல்லபுரம் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இடங்களில், நேற்று முன்தினம் இரவு முதலே, பரவலாக மழை பெய்து வருகிறது. காஞ்சி நகரில், நேற்று நாள் முழுவதும் தூறல் மழை பெய்தது. கேளம்பாக்கத்தில் அதிகபட்சமாக, 20 மி.மீ., மழையும், மாமல்லபுரத்தில் 15 மி.மீ., மழையும் பதிவானது. மாவட்டத்தில் சராசரியாக, 7.4 மி.மீ., மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட தேசிய தகவல் மையம் தெரிவித்துள்ளது. தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, வங்கக்கடலில் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டது. மாமல்லபுரம், கோவளம், புதுப்பட்டினம், கடலூர், கடப்பாக்கம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில், கடல் சீற்றம் காரணமாக, மீன்பிடி தொழிலும் முடங்கியது.இடம்மழைஅளவு(மில்லிமீட்டரில்)

உத்திரமேரூர்6.0

செங்கல்பட்டு4.8

காஞ்சிபுரம்2.1

ஸ்ரீபெரும்புதூர்2.3

தாம்பரம்8.0

மதுராந்தம்1.0

செய்யூர்3.0

திருக்கழுக்குன்றம்8.0

மாமல்லபுரம்15.0

கேளம்பாக்கம்20.2

## ரூ.1.10 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம் : ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஒரு கோடியே, 10 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில், பருத்தி ஏலம், நேற்று நடந்தது.சீராப்பள்ளி, சிங்களாந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 7,298 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சமாக, 4,950, குறைந்தபட்சமாக, 4,590, ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 4,329, குறைந்த பட்சமாக, 4,019 ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பருத்தியை, ஒரு கோடியே, 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்துச் சென்றனர்.

## வேளாண் கருத்தரங்கு

நாமக்கல் : நாமக்கல் ஆஞ்சநேயா அரிமா சங்கம், மோகனூர் அரிமா சங்கம், வானகம் சார்பில், இயற்கை வழி வேளாண்மை விழிப்புணர்வு கருத்தரங்கு, மோகனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்தது.இதில், விவசாயிகளுக்கு, வேளாண் குறித்த அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாட்டை, நாமக்கல் ஆஞ்சநேயா அரிமா சங்க தலைவர் ராஜா, செயலாளர் பாலாஜி, மோகனூர் அரிமா சங்க பட்டயத் தலைவர் பழனியாண்டி, தலைவர் ராமஜெயம், செயலாளர் முருகேசன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## தஞ்சாவூரில் 288 மி.மீ., மழை

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் (28ம் தேதி) இரவு துவங்கிய மழை, நேற்று காலை வரை நீடித்தது. மாவட்டம் முழுவதும், 288 மி.மீ., மழை பெய்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக,

அவ்வபோது மழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் இரவு துவங்கிய மழை, நேற்று காலை வரை நீடித்தது. மாவட்டம் முழுவதும், 288 மி.மீ., மழை பெய்துள்ளது. அய்யம்பேட்டை, மதுக்கூர், கும்பகோணம், மஞ்சலாறு, அணைகட்டு பகுதிகளில், 25 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்துள்ள மழை, மானாவாரி பயிர்களுக்கு மிகவும் பயனுள்ளது, என்று விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வேதாரண்யத்தில் தொடர் மழை

வேதாரண்யம்: வங்க கடலில், இலங்கை அருகே ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரமடைந்து வருவதால், வேதாரண்யம் பகுதியில் கடந்த, இரண்டு நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது வேதாரண்யம் கோடியக்கரை, ஆறுகாட்டுத்துறை வாய்மேடு, ஆயக்காரன்புலம் தலைஞாயிறு மணக்குடி போன்ற பகுதியில், பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை, 8 மணி வரை வேதாரண்யத்தில், 29 மி.மீ., மழையும், தலைஞாயிறில், 31.4 மி.மீ., கோடியக்கரையில் 22 மிமீ மழையும் பெய்துள்ளது. மழை, கடல் சீற்றம் காரணமாக வேதாரண்யம் ஆறுகாட்டுத்துறை புஷ்பவனம், வெள்ளப்பள்ளம் மற்றும் வானவன்மகாதேவி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் உள்ளனர். இதனால், படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன.

## நவதானிய பயிறு சாகுபடியில் அசத்தல்! மீட்டான்குளம் விவசாயிகள்

கமுதி : கமுதி அருகே மீட்டான்குளம் கிராமத்தில் நவதானிய பயிர்களை அதிகளவு பயிரிட்டு, மற்ற விவசாயிகளுக்கு முன்னோடியாக திகழ்கின்றனர். கமுதி ஒன்றியம் வல்லந்தை ஊராட்சிக்குட்பட்டது மீட்டான் குளம் கிராமம். சமீபத்தில் பெய்த மழையை நம்பி இப்பகுதி விவசாயிகள் தக்காளி, மிளகாய், சின்ன வெங்காயம் போன்றவற்றை பயிரிட்டுள்ளனர். குறிப்பாக, மொச்சை, கொண்டைக்கடலை, தட்டப்பயிறு, துவரைபயிறு, பாசிப் பயிறு, கானப்பயிறு, கருப்பு உளுந்து போன்ற நவதானிய பயிர்களை அதிகளவு சாகுபடி செய்துள்ளனர். இதுதவிர, கோதுமை, நெல் போன்றவை எப்போதும் இப் பகுதியில் விளைவிக்கப் படுகின்றன. அதுமட்டுமின்றி, சீசன் நேரங்களில்

நிலக்கடலை, வெள்ளரி, பீர்க்கை, சுரைக்காய் மற்றும் பல கீரை வகைகளும் சாகுபடி செய்து இப்பகுதி விவசாயிகள் மற்ற விவசாயிகளுக்கு முன்னோடியாக திகழ்ந்து வருகின்றனர். * விவசாயி, முருகேசன்: கடந்த 3 ஆண்டுகளாக மழை பொய்த்ததால், நெல் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. வானம் பார்த்த பூமியான இப்பகுதி விவசாயிகள் மனம் தளராமல் நவதானிய பயிறுவகைகளை அதிகளவு பயிரிட்டுள்ளனர். இதுபோன்ற சிறு தானிய பயிர்களால் விவசாயி களுக்கு நல்ல லாபம் கிடைத்து வருகிறது. ராமநாதபுரம்- விருதுநகர் மாவட்ட எல்லையில் மீட்டான் குளம் கிராமம் அமைந்துள்ளதால் பெரும்பாலான அதிகாரிகள் எங்கள் கிராமத்தை கண்டுகொள்வ தில்லை. எனவே, இப்பகுதி விவசாயி களின் நலன் கருதி வேளாண் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் தேவையான ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்கி விவசாயம் செழிப்படைய வழிவகை செய்ய வேண்டும்.

தினகரன்

இன்றையவேளாண்செய்திகள்

**முட்டை விலை உயர்வு 321 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு ஆலோசித்தனர். புத்தாண்டையொட்டி கேக் தயாரிக்க முட்டை விற்பனை அதிகரித்துள்ளது. இதனால் முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 5 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதை தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 316 காசில் இருந்து 321 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.58, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.66 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 50 சதவீத மானியத்தில் வேளாண் பொருள் உலர்த்தும் கருவி

திருவள்ளூர், : கலெக்டர் வீரராகவராவ் அறிக்கை: தமிழ்நாடு அரசு வேளாண் பொறியியல் துறை மூலம் 2014-15ம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்துக்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்க சிறு, குறு, பெண் மற்றும் இதர விவசாயிகளுக்கு 446 கருவிகளுக்கு யி115.50 லட்சமும், இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன விவசாயிகளுக்கு 23 கருவிகளுக்கு யி3.34 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு: களையெடுக்கும் கருவிக்கு 0.15-0.19 சதவீதமும், சக்தி வாய்ந்த தெளிப்பானுக்கு 0.8-0.10 சதவீதமும், சிறிய நெல் நடவு இயந்திரத்துக்கு 0.75-0.94 சதவீதமும், பெரிய நெல் நடவு இயந்திரத்துக்கு 2-2 சதவீதமும், நெல் நாற்றங்கால் செய்யும் கருவிக்கு 0.50-0.63 சதவீதமும், பண்ணை கருவிக்கு 0.8-0.10 சதவீதமும், பவர் டில்லருக் 0.60-0.75 சதவீதமும், ரோட்டவேட்டருக்கு 0.50-0.63 சதவீதமும், குழியெடுக்கும் கருவிக்கு 0.35-0.44 சதவீதமும், உழுவை இயந்திரத்துடன் கூடிய இழுவைகளுக்கு 0.50-0.63 சதவீதமும், மட்டை வெட்டும் கருவி தட்டு வெட்டும் கருவிகளுக்கு 0.50-0.63 சதவீதமும், இலை வெட்டும் கருவியுடன் கூடிய உழுவைகளுக்கு 0.50-0.63 சதவீதமும், கரும்பு கரணை வெட்டும் கருவிக்கு 0.50-0.63 சதவீதமும், வைக்கோல் கட்டும் கருவிக்கு 0.50-0.63 சதவீதமும், படி ரீப்பருக்கு 0.50-0.63 சதவீதமும் வழங்கப்படுகிறது. மேலும் தமிழ்நாடு சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் விவசாயிகளுக்கு சூரிய சக்தி மூலம் இயங்கும் வேளாண் பொருட்களை உலர்த்தும் கருவி வாங்குவதற்கு 50 சதவீதம் மானியம் வழங்க அரசாணை அளிக்கப்பட்டுள்ளது. வேளாண் பொருள் உலர்த்தும் கருவியின் விலை ரூ4 லட்சம். இதில் 50% மானியம் போக பயனாளிகள் ரூ2 லட்சம் பங்களிப்பாக வழங்க வேண்டும். எனவே, திருவள்ளூர் செயற்பொறி யாளர் (வேளாண் பொறியியல் துறை) கட்டுப்பாட்டில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) திருவள்ளூர்,

திருத்தணி, பொன்னேரி ஆகிய அலுவலகங்களை தொடர்பு கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## அரூர் பகுதியில் கம்பு சோளம் விளைச்சல் அமோகம் 10 கிலோவுக்கு 8 மூட்டை மகசூல்

அரூர், : அரூர் வட்டத்தில் கம்பு சோளம் விளைச்சல் அமோகமாக உள்ளது. 10 கிலோவுக்கு 8 மூட்டை மகசூல் கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டம் அரூர் தாலுகாவிற்குட்பட்ட அரூர், மொரப்பூர், கடத்தூர், பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் அதிக பரப்பளவில் கம்பு சோளம் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, விளைச்சல் அதிகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: கம்பு சோளம் ஒரு ஏக்கருக்கு 10 கிலோ மட்டுமே தேவைப்படுகிறது. ஆனால், விளைச்சல் 8 மூட்டை(தலா 100 கிலோ) கிடைக்கிறது. இதனை வறுத்து சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். நன்றாக அவித்து கழனி தண்ணீருடன் கரைத்து மாடுகளுக்கு காண்பித்தால் நன்றாக பால் சுரக்கும். மேலும் கூழ், பிஸ்கட், ரொட்டி தயாரிப்பிலும் இந்த கம்பு சோளம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் நல்ல விலை கிடைத்து வருகிறது. 3 மாதத்தில் விளைச்சலுக்கு வருவதால் பராமரிப்பு செலவும் குறைவு. தற்போது, ஒரு கிலோ ரூ22 முதல் விற்பனை செய்யப்படுகிறது. செலவு குறைவு, லாபம் அதிகம் என்பதால் கம்பு சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மொரப்பூர் பகுதியில் கம்பு சோளம் அறுவடை நடைபெற்று வருகிறது. கதிரில் இருந்து மணிகளை பிரிப்பதற்காக வெயிலில் உலர வைத்துள்ளனர்.

## திருச்செங்கோட்டில் 2500 மூட்டை மஞ்சள் ரூ1.25 கோடிக்கு விற்பனை

திருச்செங்கோடு, : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 2500 மூட்டை மஞ்சள் ரூ ஒரு கோடியே 25 லட்சத்திற்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் (27ம் தேதி) மஞ்சள் ஏலம் நடைபெற்றது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர்,

கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை, ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து வந்திருந்த 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கொள்முதல் செய்து சென்றனர். இதன்படி, 2500 மூட்டை மஞ்சள் டெண்டர் மூலம் ரூ ஒருகோடியே 25 லட்சத்திற்கு விற்பனையானது. இதில், விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ 6,868 முதல் ரூ10,555 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ6,177 முதல் ரூ8,449 வரை விலைபோனது. பனங்காளி ரகத்திற்கு ரூ9,767 முதல் ரூ13,777 வரை விலை கிடைத்தது. கடந்த வாரம் 2,500 மூட்டை மஞ்சள் ரூஒரு கோடிக்கு மட்டுமே விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

## <u>விஞ்ஞான முறையில் தானியங்கள் சேமிப்பு குறித்த பயிற்சி</u>

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு விஞ்ஞான முறை தானியங்கள் சேமிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் கோவை தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை மைய வேளாண்மை உதவி இயக்குநர் சாத்தப்பன் பங்கேற்று பயிற்சி அளித் தார். அப்போது அவர், விவசாயிகள் விளைபொருட்க ளை சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல், குளிர்சாதன கிடங்குகளில் இருப்பு வைத்து சேமித்தல், சந்தை தகவல்கள், அக்மார்க் நெட், வேளாண்மை சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக முறைகள், பொருளீட்டுக் கடன் திட்டம் ஆகியவறை குறித்து விளக்கினார். கிருஷ்ணகிரி வேளா ண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) காளியப்பன், விவசாயிகள் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைப்பது, தேசிய உணவு பதப்படுத்துதல் இயக்கம் ஆகியவை குறித்து விளக்கியதுடன், வேளாண் விளைபொருட்கள், காய்கறிகள் மற்றும் பழங்களை மதிப்பு கூட்டி நுகர்வோர் விரும்பும் வண்ணம் சந்தைப்படுத்தினால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என விளக்கம் அளித்தார். தர்மபுரி விற்பனை குழு செயலாளர் சங்கரசுப்பிரமணியன், தக்காளி அறுவடை செய்த பிறகு மதிப்பு கூட்டப்பட்ட தக்காளி ஜாம், தக்காளி கெட்சப் ஆகிய பதப்படுத்தப்பட்ட உணவு பொருளாக மாற்றி விற்பனை செய்தால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என் றார்.

கிருஷ்ணகிரி வேளா ண்மை அலுவலர் (வேளா ண் வணிகம்) பூர்ணமதி, தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் குறித்தும், உழவர் உற்பத்தி நிறுவனம் அமைப்பதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். இந்த பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சுந்தரராஜ், சுரேஷ், விற்பனை கூட கண்காணிப்பாளர், வாரியப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**<u>நீர் சேமிப்பு, மீன் வளர்ப்புக்காக 300 பண்ணை குட்டை அமைக்க முடிவு</u>**

கோவை, : கோவை மாவட்டத்தில் மழை நீர் சேமிப்பு, மீன் வளர்ப்பு பணிக்காக 300 பண்ணை குட்டைகள் புதிதாக அமைக்கப்படவுள்ளது. கோவை மாவட்டத்தில் 3.15 லட்சம் எக்டரில் விவசாய நிலப்பரப்பு இருக்கிறது. நடப்பாண்டில், 2.80 லட்சம் எக்டரில் விவசாயம் நடக்கிறது. வறட்சியை தவிர்க்க, மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்மை துறை சார்பில் பண்ணை குட்டை திட்டம் துவக்கப்பட்டது. மாவட்ட அளவில் 450 பண்ணை குட்டை அமைக்கப்பட்டது. ஒரு பண்ணை குட்டை அமைக்க 2 லட்ச ரூபாய் முதல் 3 லட்ச ரூபாய் வரை செலவிடப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறை மூலமாக பண்ணை குட்டை அமைக்கப்பட்டது. மாவட்ட அளவில் பண்ணை குட்டைகள் அமைக்க 22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த சில மாதங்களாக கனமழை பெய்யாததால் இந்த குட்டைகளில் மழை நீர் அதிகளவு தேங்கியது. கடந்த 6 மாதத்தில் 215 பண்ணை குட்டைகள் நிரம்பியது. வரும் ஆண்டில் மாவட்ட அளவில், 300 பண்ணை குட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டு வருகிறது. இந்த பண்ணை குட்டைகளின் விவசாய பரப்பு அதிகரிக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும் வாய்ப்புள்ளது. வேளாண்மை துறையினர் கூறுகையில், ‘‘1.5 மீட்டர் ஆழத்தில் 15 மீட்டர் நீள, அகலத்தில் பண்ணை குட்டை அமைக்க முடியும். விவசாயிகள் தங்கள் விளை நிலத்திலே யே பண்ணை குட்டை எளிதாக அமைக்கலாம். 50 சென்ட் இடம் இருந் தால் தாழ்வான இடத்தில் பண்ணை குட் டை அமைக்கலாம். மழை நீர் முழுவதும் இந்த குட்டையில் தேக்க முடியும். குட்டையின் அடிப்பாகத்தில் களிமண் போட்டு தளம் அமைக்கலாம். இதன் மூலமாக அதிக நீரை சேமிக்க முடியும். இந்த குட்டையில் இருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம்

செய்யலாம். குட்டையில் கெண்டை, ஜிலேபி, கட்லா, ரோகு போன்ற மீன்களை வளர்க்கலாம். ஒரு குட்டையில் பல லட்ச லிட்டர் நீரை தேக்கி வைக்க முடியும். குறைந்தபட்ச மழை பெய்தால் கூட போதும் ஆண்டு முழுவதும் பண்ணை குட்டையை நம்பி விவசாயம் செய்ய முடியும். இதன் மூலமாக விவசாய பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுவதை வெகுவாக தவிர்க்க முடியும்,'' என்றனர்.

## <u>இரண்டாம்போக நெல் சாகுபடிக்கு அமராவதி அணை திறக்க கோரிக்கை</u>

உடுமலை, : இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். உடுமலை அருகே உள்ள அமராவதி அணையின் உதவியால் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலங்களும். கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் பாசனத்தில் 3500 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. தற்போது பெய்த வடகிழக்கு பருவமழையால் அமராவதி அணை நிரம்பியது. இதனால் ஒன்றரை ஆண்டுகளுக்குப்பிறகு பழைய, புதிய ஆயக்கட்டுப்பகுதிகளில் 7500 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில், சமீபத்தில் பெய்த புயல் மழையால் பெரும்பாலான அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கி முளைத்து போய் விட்டன. இதன் காரணமாக மகசூல் குறைந்து விட்டது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். எனவே இரண்டாம் போக நெல் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளனர். அதற்காக அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டுமென அதிகாரிகளை பலமுறை விவசாயிகள் கேட்டனர். ஆனால் அதற்கு இதுவரை யாரும் திருப்திகரமான பதிலை தெரிவிக்க வில்லை. மாவட்ட கலெக்டர் இதில் தலையிட்டு இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>அதிக மகசூல் பெற தென்னைக்கு உரமிடும் வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை</u>

சேதுபாவாசத்திரம், : அதிக மகசூல் பெற தென்னை மரங்களுக்கு இட வேண்டிய உர அளவுகள் குறித்து விவசாயிகளுக்கு யோசனை

தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: தென்னைக்கு உரமிடுவதற்கு ஏதுவாக தற்போது கடைமடை பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகி றது. இதை பயன்படுத்தி நாட்டுரக (நெட்டை ரகம்) தென்னைகளுக்கு நடவு செய்தது முதல் ஒரு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 10 கிலோ, யூரியா 325 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 500 கிராம், வேப்பம்புண்ணாக்கு 1.500 கிலோ இட வேண்டும். 2 வருட கன்றுக்கு தொழு உரம் 20 கிலோ, யூரியா 650 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2.500 கிலோ. 3 ஆண்டு கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 975 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1.500 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 3.750 கிலோ இட வேண்டும். 4 ஆண்டு கன்றுக்கு தொழு உரம் 40 கிலோ, யூரியா 1.300 கிலோ, சூப்பர் ற்றும் பொட்டாஷ் தலா 2 கிலோ, வேப்பம்புண் ணாக்கு 5 கிலோ. 5 ஆண்டு கன்றுக்கு தொழு உரம் 50 கிலோ, யூரியா 1.300 கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ இட வேண்டும். வீரிய ஒட்டு (நெட்டைஜ்குட்டை மற்றும் குட்டைஜ்நெட்டை) ரக தென்னைகளுக்கு ஒரு வருட கன்றுக்கு தொழு உரம் 15 கிலோ, யூரியா 500 கிராம், சூப்பர் 375 கிராம், பொட்டாஷ் 750 கிராம், வேப்பம்புண்ணாக்கு 1.500 கிலோ. 2 வருட கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 1 கிலோ, சூப்பர் 750 கிராம், பொட்டாஷ் 1.500 கிலோ, வேப்பம்புண் ணாக்கு 2.500 கிலோ இட வேண்டும். 3 வருட கன்று க்கு தொழு உரம் 45 கிலோ, யூரியா 1.500 கிலோ, சூப்பர் 1.150 கிலோ, பொட்டாஷ் 2.250 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 3.750 கிலோ. 4 வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மரம் ஒன்றுக்கு தொழு உரம் 60 கிலோ, யூரியா 2.250 கிலோ, சூப்பர் 1.500 கிலோ, பொட்டாஷ் 3 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ இட வேண்டும். மேற்கண்ட உர பரிந்துரை அளவை சமபங்காக பிரித்து ஆண்டுக்கு இருமுறை இட வேண்டும். அதாவது மார்கழி, தை மாதங்களில் ஒரு முறையும், ஆனி, ஆடி மாதங்களில் ஒரு முறையும் இட வேண்டும். மேற்கண்ட உரங்களை இட்ட 30 முதல் 45 நாட்கள் கழித்து தென்னை நுண்சத்து உரத்தை மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் இட வேண்டும். இவ்வகை உரங்களை மரத்தை

சுற்றி 5 அடி தூரத்தில் இட்டு மண்ணை கிளறி விட்டு உடனடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்தால் ஆண்டுக்கு சராசரியாக 150 முதல் 200 தேங்காய்கள் வரை மகசூல் எடுக்க முடியும்.

<u>பெரியாற்று கால்வாயில் தண்ணீர் திறப்பு</u>

மேலூர், : முறை பாச னம் வைக்கப்பட்டுள்ள நிலையில் பெரியாற்று கால்வாயில் மீண்டும் நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. ஒரு போக ஆயக்கட்டு பகுதியான மேலூர் பகுதிக்கு கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தண்ணீர் திறக்கப்பட்டது. போதிய அளவு கண்மாய்களுக்கு தண்ணீர் வந்து சேர வில்லை என பல பகுதிகளை சேர்ந்த மக்கள் பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிடுவ தும், ரோடு மறியல் செய்வதும் தொடர்கதையாக இருந்தது. இந்நிலையில் வெள்ளலூர், உறங்கான்பட்டி, கீழவளவு உட் பட 10 ஊராட்சிகளை சேர்ந்த 5 ஆயிரம் பேர் நான்கு வழிச்சாலையில் 5 மணி நேர ரோடு மறியல் செய்தனர். இதைத்தொடர்ந்து முறையாக அதிகாரிகள் தண்ணீர் விட துவங்கினர். இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு முறைப் பாசனம் வைக்கப்பட்டது. நான்கு நாட்கள் தண்ணீரை நிறுத்தி, அதன் பிறகு விடுவது என முடிவு செய்யப்பட் டது. இந்நிலையில் நேற்று வைகை அணையில் இருந்து இரு மற்றும் ஒரு போகத்திற்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. வைகை அணை யில் இருந்து 1800 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. அணையில் நீர்மட்டம் குறைவாக உள்ளதால், விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றையவேளாண்செய்திகள்

<u>நாகையில்2–வதுநாளாகதொடர்ந்துமழை</u>

வங்க கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக நாகையில் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு தொடங்கிய மழை பலத்த மழையாகவும், சாரல்

மழையாகவும் பெய்து வருகிறது. நேற்று காலை முதல் தொடர்ந்து மழை பெய்து வந்தது. பின்னர் அவ்வப்போது லேசான மழையாக விட்டு விட்டு பெய்தது. நாகையில் நேற்று முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் இருண்டே காணப்பட்டது. இதனால் நாகையில் பள்ளமான இடங்களில் மழைநீர் தேங்கி குளம்போல் காட்சியளித்தன. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மேலும், நாகை மீனவர்கள் வேலை நிறுத்தம் காரணமாக விசைப்படகு மீனவர்கள் ஏற்கனவே 20–வது நாளாக நேற்று கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இந்நிலையில் தற்போது பெய்து வரும் மழையால் பைபர் படகு மற்றும் சிறிய ரக படகுகளில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களும் நேற்று மீன்பிடிக்க செல்லவில்லை.

---

## பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் கருவிகளை அரசு மானியத்துடன் பெற விண்ணப்பிக்கலாம்

வேளாண்மை பொறி யியல் துறையின் மூலம் வழங்கப்படும் வேளாண் கருவிகளை அரசு மானியத்துடன் பெற விவசாயிகள் விண்ணப் பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் கருவிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வேளாண்மையில் எந்திர மயமாக்கலை ஊக்கப்படுத்தும் வகையில் பெரம்பலுீர் மாவட்டத்திற்கு 2014–15–ம் ஆண்டில் 3 பல தானியம் கதிரடிக்கும் கருவிகள், 8 குதிரைத் திறனுக்கு குறை வான களை எடுக்கும் கருவிகள் 20, விசைத்தெளிப்பான் 20 , இருபாலரும் இயக்கும் வகை யிலான கருவிகள் 5, இருசக்கர உழுவு கருவிகள் 10 , சுழல் கலப்பை 15, சிறப்பு கருவிகளான தட்டை வெட்டும் கருவி, குழி தோண் டும் கருவி 9, வைக்கோல் கட்டும் கருவி 3, என மொத்தம் 90 வேளாண் கருவிகள் ரூ. 29 லட்சத்து 74 ஆயிரம் அரசு மானியத்துடன் விவசாயி களுக்கு வழங்கு வதற்கு அரசாணையும் நிதி ஒதுக்கீடும் பெறப் பட்டுள்ளது. இதில் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்திலும், இதர விவசாயி களுக்கு 40 சதவீத மானியத் திலும் வழங்கும் வகையில் 71 வேளாண் கருவிகளுக்கு ரூ.23 லட்சத்து 61 ஆயிரம் ஒதுக்கீடும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கும் வகை யில் 19 வேளாண் கருவிகளுக்கு ரூ. 6 லட்சத்து 13 ஆயிரம் ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. கருவிகளுக்கு வழங்கும் மானிய மானது

அரசால் நிர்ணயிக்கப் பட்ட அதிகபட்ச மானியத்தை மிகாமல் இருக்கும். விண்ணப்பிக்க வேண்டுகோள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயி கள் விண்ணப்பத் துடன் கணினி சிட்டா, அடங்கல் , சமீபத்தில் எடுக்கப் பட்ட புகைப்படம் 2, வட்டாட் சியரிடமிருந்து பெறப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயி சான்று, ஆதி திராவிடருக்கான சான்று, துறையால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனத் திட மிருந்து பெறப்பட்ட விலைப் புள்ளி ஆகிய ஆவணங்களுடன் துறை மங்கலத்தில் உள்ள பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் உதவி செயற் பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் விண்ணப் பத்தை சமர்ப்பித்து முன்னு ரிமை அடிப்படையில் விவ சாயிகள் தங்களுக்கு தேவைப் படும் வேளாண் கருவி களை அரசு மான்யத்துடன் பெற்று பயனடையலாம். மேற்கண்ட தகவல் கலெக் டர் அலுவலக செய்தி குறிப் பில் கூறப்பட்டுள்ளது.